பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

உதயன்
விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com
077 120 9996
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 232

வியாழக்கிழமை
16 ஜூலை 2026

ஆனி 32 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

## பி.எச்.ஐ.யின் பெயரைப் பாவித்து கிளிநொச்சியில் நூதன மோசடி!

கிளிநொச்சி, ஜூலை 16
கிளிநொச்சியில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஒருவரின் பெயரைத் தவறாகப் பயன்படுத்தி வர்த்தகர்களிடம் நிதி மோசடி செய்யும் கும்பல் ஒன்று அண்மைய நாட்களாகக் கைவரிசை காட்டி வருகிறது .
கிளிநொச்சியில் இரு வருடங்களுக்கு முன்னர் பணியாற்றிய பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஒருவரின் பெயரைப் பயன்படுத்தியே இந்த மோசடி இடம் »11




## கழிவு மீள்சுழற்சி மையத்தை அகற்றுக!

காக்கைதீவு மக்கள் போராட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 16
யாழ்ப்பாணம் - காக்கைதீவுப் பகுதியில் அமைந்துள்ள கழிவு மீள்சுழற்சி மையத்தை அவ்விடத்திலிருந்து உடனடியாக அகற்றக் கோரி, அப்பகுதி மக்கள் நேற்று யாழ். மாநகர சபைக்கு முன்பாகக் கண்ட »11

## காணி பிடிக்கும் கும்பல்; யாழ்.மக்களே அவதானம்!



யாழ்ப்பாணம், ஜூலை 16
யாழ்ப்பாணத்தில் போலி ஆவணங்களைப் பயன்படுத்தி, உரிமையாளர்கள் இல்லாத வெற்றுக்காணிகளைத் திட்டமிட்டு அடாத்தாகக் கையகப்படுத்தும் ஆபத்தான கும்பல் குறித்து விழிப்புடன் இருக்குமாறு பொலிஸார் எச்சரித்துள்ளனர். அண்மையில் திருநெல்வேலி, பலாலி வீதிக்கு அருகிலுள்ள வெற்றுக் »11

வவுனியா மாநகரசபை முதல்வர்

## காண்டீபனின் பதவி நீக்கத்துக்கு இடைக்காலத் தடை நீடிப்பு!



வவுனியா, ஜூலை 16
வவுனியா மாநகர முதல்வரான சுந்தரலிங்கம் காண்டீபனை பதவி நீக்கம் செய்து வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் வெளியிட்ட வர்த்தமானி அறிவித்தலுக்கு வவுனியா மேல் நீதிமன்றம் »11

செம்மணிப் புதைகுழி

# 2 சிறார்களின் என்புக்கூடுகள் நேற்றைய அகழ்வில் கண்டறிவு!

**யாழ்ப்பாணம், ஜூலை 16**
**தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்த செம்மணி மனிதப் புதைகுழியின் மூன்றாம் கட்டத்தின் மூன்றாம் பகுதி அகழ்வுப் பணிகள் நேற்று மீண்டும் ஆரம்பிக்கப்பட்ட நிலையில், முதல் நாளிலேயே மேலும் இரண்டு சிறுவர்களின் என்புக் கூடுகள் கண்டறியப்பட்டு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன.** »11

பட்டத்தால் வந்த வினை

## வை-12 ரக விமானம் நூலிழையில் தப்பியது!

கொழும்பு,ஜூலை 16
இரத்மலானை விமானப்படைத் தளத்தில் நேற்று பயிற்சிப் பறப்பில் ஈடுபட்டிருந்த வை-12 ரக விமானம் ஒன்றின் சக்கரத்திலும் இயந்திரப் பகுதியிலும் எதிர்பாராத விதமாகப் பட்டமொன்றின் நூல் சிக்கியதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.
எனினும், விமானியின் சாதுரியத்தால் விமானம் பாதுகாப்பாகத் தரையிறக்கப்பட்டுப் பெரும் விபத்து தவிர்க்கப்பட்டது. »11

## சங்குப்பிட்டிப் பாலத்தில் பாதிப்பு; பாரவூர்திகள் பயணிக்க வேண்டாம்!

யாழ்ப்பாணம், ஜூலை 16
சங்குப்பிட்டிப் பாலத்தில் நேற்றுப் புதன்கிழமை ஏற்பட்டுள்ள பாதிப்புக் காரணமாக குறித்த பாலத்தினூடாகப் பாரவூர்திகள் (டிப்பர், லொறி, கொள்கலன் ஊர்திகள்) செல்வது மிகவும் ஆபத்தினை ஏற்படுத்தும். எனவே மறு அறிவித்தல் வரும் வரை குறித்த பாலத் »11

## டெங்கு 71,000+!

கொழும்பு, ஜூலை 16
இலங்கையில் டெங்குத் தொற்றின் பரவல் மிகத் தீவிரமடைந்துள்ள நிலை »11



## பொலிஸ் மீது துப்பாக்கிச் சூடு!

கட்டுநாயக்கவில் பரபரப்பு



கொழும்பு, ஜூலை 16
போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் அதிகாரி ஒருவரின் கைத்துப்பாக்கியைப் பறித்து, அவர் மீதே துப்பாக்கிச்சூடு நடத்திவிட்டு போதைப்பொருள் வியாபாரி தப்பியோடி »11

சாதாரணதரப் பரீட்சை - 2026

## விண்ணப்பிக்கும் மாணவருக்கு தே.அ.அட்டை அவசியமில்லை!

கொழும்பு,ஜூலை 16
2026ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் மாணவர்களுக்குத் தேசிய அடையாள அட்டை கட்டாயமில்லை என இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.
தற்போது 'ஒன்லைன்' மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்டு »11

முச்சந்தி முரளி

"மோட்சம் போனாலும் அங்க கூட உந்த மோசடிக்காரர் தங்கட கைவரிசையைக் காட்டுவினம் போல"

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

| கொவிசெத | ஹந்தஹண ராசி சுப பலன் | NLB ஜய | மெகா பவர் | மஹஜன சம்பத | தன நிதானய | சுப தவசக் |
|---|---|---|---|---|---|---|
| திகதி 15.07.2026 | திகதி 14.07.2026 | திகதி 14.07.2026 | திகதி 14.07.2026 | திகதி 14.07.2026 | திகதி 14.07.2026 | திகதி 14.07.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் 4491 | சீட்டிழுப்பு இலக்கம் 1558 | சீட்டிழுப்பு இலக்கம் 0517 | சீட்டிழுப்பு இலக்கம் 2597 | சீட்டிழுப்பு இலக்கம் 6249 | சீட்டிழுப்பு இலக்கம் 2279 | சீட்டிழுப்பு இலக்கம் 0365 |
| ஆங்கில எழுத்து I | வெற்றி இலக்கினம் கும்பம் | ஆங்கில எழுத்து C | ஆங்கில எழுத்து P | ஆங்கில எழுத்து U | ஆங்கில எழுத்து M | வெற்றி இலக்கினம் துலாம் |
| | | | சுப்பர் இலக்கம் 13 | | | |
| வெற்றி இலக்கங்கள் 14 27 42 65 | வெற்றி இலக்கங்கள் 03 05 15 34 | வெற்றி இலக்கங்கள் 6 8 1 8 | வெற்றி இலக்கங்கள் 18 49 55 59 | வெற்றி இலக்கங்கள் 5 4 6 9 9 7 | வெற்றி இலக்கங்கள் 07 08 39 62 | வெற்றி இலக்கங்கள் 29 49 65 |
| விசேட எழுத்து I | | | | | விசேட எழுத்து M | |

# மாகாணத் தேர்தலை நடத்த அரசாங்கம் எப்போதும் தயார்!

## அமைச்சர் நளிந்த தெரிவிப்பு

**கொழும்பு,ஜூலை 16**

**புதிய தேர்தல் முறைமை நாடாளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டவுடன், மாகாணசபைத் தேர்தலை எப்போது வேண்டுமானாலும் நடத்துவதற்கு அரசாங்கம் தயாராக உள்ளது. இதற்காக நிதிப் பற்றாக்குறை எதுவும் இல்லை என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், மாகாணசபைத் தேர்தலை கூடிய விரைவில் நடத்துவதே எங்களது பிரதான எதிர்பார்ப்பாகும். எனினும், தேர்தல் என்பது மக்களின் உண்மையான விருப்பை பிரதிபலிக்கும் ஒன்றாக அமைய வேண்டும். இலங்கை மக்கள் நீண்டகாலமாகவே, தங்களுக்குப் பழக்கமான விருப்புவாக்கு முறைமையை ஒழித்து, தங்கள் தொகுதிக்குப் பொறுப்பான ஒரு மக்கள் பிரதிநிதியை நேரடியாகத் தேர்ந்தெடுக்கும் தேர்தல் முறைமையையே எதிர்பார்த்திருந்தனர். இதற்கமையவே உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்காக இத்தகையதொரு புதிய தேர்தல் முறைமை அறிமுகப்படுத்தப்பட்டு, அதன்படி தேர்தல்களும் நடத்தப்பட்டன. புதிய தேர்தல் முறைமை அறிமுகப்படுத்தப்பட்டதன் மூலம், மக்கள் தங்களது தொகுதிக்கான பிரதிநிதியை நேரடியாக அடையாளம் காணக்கூடியதாக இருந்ததுடன், பழைய தேர்தல் முறைமைகளில் காணப்பட்ட தேவையற்ற விருப்பு வாக்கு மோதல்களும் முற்றாக ஒழிக்கப்பட்டன. அத்துடன், தேர்தல் பிரச்சாரங்களுக்கான செலவுகளும் கணிசமாகக் குறைந்தன. அதேவேளை, பெண்களுக்கான பிரதிநிதித்துவமும் இதன் மூலம் உறுதிப்படுத்தப்பட்டது. மக்களின் இந்த விருப்பங்களை ஒதுக்கித்தள்ளிவிட்டுப் பழைய தேர்தல் முறைமைக்கு நாம் திரும்ப முடியாது. இந்தப் புதிய தேர்தல் முறைமை தொடர்பான பணிகளை நாம் நாடாளுமன்றக்குழு ஒன்றிடம் ஒப்படைத்துள்ளோம். நாடாளுமன்றத்தில் இது அங்கீகரிக்கப்பட்டவுடன் மாகாணசபைத் தேர்தலை உடனடியாக நடத்துவதற்கு அரசாங்கம் தயாராக உள்ளது-என்றார். (ச-இ)

## அரசாங்கத்துக்கு எதிராக ஐ.நா.வில் முறைப்பாடு!

கொழும்பு,ஜூலை 16

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் ஜனநாயக விரோதப் போக்குகள் மற்றும் நீதித்துறை மீதான அரசியல் தலையீடுகளுக்கு எதிராக, இலங்கையின் கூட்டு எதிர்க்கட்சி ஐக்கிய நாடுகள் சபையிடம் முறைப்பாடு செய்துள்ளது.

பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தலைமையிலான எதிர்க்கட்சிக்குழுவினர் நேற்றுப் புதன்கிழமை ஐ.நா. அதிகாரிகளை நேரில் சந்தித்து இதுதொடர்பான எதிர்ப்பு மகஜரைக் கையளித்தனர்.

தற்போதைய அரசாங்கத்தின்கீழ் ஜனநாயக விழுமியங்கள் சீர்குலைக்கப்படுவதாகவும், நீதித்துறையின் சுதந்திரத்தில் நேரடித் தலையீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் அந்த மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ச-இ)

## பிரமுகர் பாதுகாப்பு அரசாங்கம் மறுப்பு

கொழும்பு,ஜூலை 16

சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பௌத்த மதகுருமார் உட்பட 11 தனிநபர்களுக்கு பிரமுகர் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாக வெளியான செய்திகளை அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான கலாநிதி நளிந்த ஜயதிஸ்ஸ நிராகரித்துள்ளார். எவருக்கும் எந்தவொரு சிறப்புப் பாதுகாப்பு ஏற்பாடுகளும் வழங்கப்படவில்லை.

அசோக ரன்வல, முகமது ரிஸ்வி சாலி, சரத் குமார, அஜித் சாந்த, ருவன் விஜேவீர, திலங்க யூ. கமகே, சுனில் பியன்வில, தினேஷ் ஹேமந்த, ரஞ்சித் மத்தும பண்டார, எச்.ஏ. தர்மசேன மற்றும் கலகொட அத்தே ஞானசார தேரர் ஆகியோருக்கு விஐபி பாதுகாப்பு ஒதுக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகி இருந்தன. சம்பந்தப்பட்ட நபர்கள் எவருக்கும் சிறப்புப் பாதுகாப்பு வழங்கப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-44)

**சுபிரி தன சம்பத**
திகதி: 15.07.2026 | தினம்: புதன்கிழமை | வெற்றி வாரம்: 0957
ஆங்கில எழுத்து: U | வெற்றி இலக்கம்: 0 1 9 1 7 5

**Super Ball**
திகதி: 15.07.2026 | தினம்: புதன்கிழமை
சீட்டிழுப்பு வாரம்: 3223 | ஆங்கில எழுத்து: W | வெற்றி இலக்கம்: 20 41 54 77


**சனிதா**
திகதி: 15.07.2026 | தினம்: புதன்கிழமை
ஆங்கில எழுத்து: P | வெற்றி இலக்கம்: 15 27 38 70 | வெற்றி வாரம்: 5384

**SASIRI**
திகதி: 15.07.2026 | தினம்: புதன்கிழமை
வெற்றி வாரம்: 1053 | வெற்றி இலக்கம்: 25 31 39

**லக்ன ராசி**
திகதி: 15.07.2026 | தினம்: புதன்கிழமை
தனுஷம் | வெற்றி இலக்கம்: 03 44 54 58 | சீட்டிழுப்பு வாரம்: 4935

**KAPRUKA**
திகதி: 15.07.2026 | தினம்: புதன்கிழமை
ஆங்கில எழுத்து: O | சுப்பர் இலக்கம்: 32 | வெற்றி இலக்கம்: 22 44 53 63 | வெற்றி வாரம்: 2399

**அத கோடிபதி**
திகதி: 15.07.2026 | தினம்: புதன்கிழமை
ஆங்கில எழுத்து: J | வெற்றி இலக்கம்: 31 59 68 70 | வெற்றி வாரம்: 3049



## நல்லூர் பண்டாரிக்குளத்தில் பாலம் அமைப்பதற்கு அடிக்கல்

யாழ்ப்பாணம்,ஜூலை 16

யாழ். மாநகரசபைக்குட்பட்ட நல்லூர் பண்டாரிக்குளம் பிள்ளையார் கோவில் பகுதியில் பாலம் அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் மற்றும் யாழ்.மாநகர முதல்வர் மதிவதனி விவேகானந்தராஜா உள்ளிட்டோரின் பங்கேற்புடன் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

கிராமப்புற மக்களின் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்தும் நோக்கில், 1,000 மில்லியன் ரூபா முதலீட்டில் 800 கிராமப் பாலங்கள் அமைக்கும் தேசிய வேலைத்திட்டம் நேற்றுமுன்தினம் நாடு முழுவதும் ஆரம்பித்துவைக்கப்பட்டது. இதன் முதற்கட்டமாக 100 கிராமப் பாலங்கள் நிர்மாணிக்கப்படவுள்ளன. அதன் ஒரு பகுதியாக, கிராமங்களில் உள்ள சிறிய பாலங்களை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின்கீழ் தெரிவுசெய்யப்பட்ட நல்லூர் பண்டாரிக்குளம் பிள்ளையார் கோயில் பகுதியில் உள்ள பாலம் புனரமைப்பு செய்யப்படவுள்ளது. (ச-26-25)



## நெல் கொள்வனவு கிளிநொச்சியில் ஆரம்பம்

கிளிநொச்சி,ஜூலை 16

கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளிடமிருந்து நேற்று முதல் நெல் கொள்வனவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பன்னங்கண்டி களஞ்சியசாலையில் கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் இதனை ஆரம்பித்துவைத்தார்.

நெல் சந்தைப்படுத்தல் சபையால் ஒரு கிலோ நாட்டு நெல் 120 ரூபாவுக்கும், ஒரு கிலோ சம்பா நெல் 130 ரூபாவுக்கும், ஒரு கிலோ கீரிச் சம்பா நெல் 140 ரூபாவுக்கும் கொள்வனவு செய்யப்படவுள்ளன. (ச-55)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media





# சிவத்தலங்களைத் தரிசிக்கும் 'மரபுரிமைப் பயணம்' ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜூலை 16

**யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் அமைந்துள்ள வரலாற்றுப் பழமை வாய்ந்த சிவத்தலங்களையும், சோழர் காலத்து ஆன்மிகப் பெருமையையும் இளைய தலைமுறையினருக்குக் கொண்டு சேர்க்கும் நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள விசேட 'மரபுரிமைப் பயணம்' இன்று வியாழக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.**

இந்த சிவதரிசனப் பயணத்தினைத் தொல்லியல் திணைக்களத்தினர், வடமாகாண சுற்றுலாப் பணியகத்தினர் மற்றும் இராஜ இராஜேந்திர சுவாமிகள் ஆகியோர் இணைந்து ஒழுங்கமைத்துள்ளனர். இந்தப் பயணம் இன்று வியாழக்கிழமை காலை 7.30 மணியளவில் யாழ்ப்பாணக் கோட்டை முனீஸ்வரன் ஆலய முன்றலில் இருந்து ஆரம்பமாகவுள்ளது. அங்கிருந்து புறப்படும் யாத்திரிகர்கள் துணைவி பிரகேஸ்வரன் ஆலயம், கீரிமலை நகுலேஸ்வரம், சாவகச்சேரி வாரிவரனேஸ்வரம், கிளிநொச்சி உருத்திரபுரம் சிவன் ஆலயம், பூநகரி மண்ணித்தலை சிவாலயம் ஆகியவற்றை தரிசிக்கவுள்ளனர். இந்தப் பயணத்தில் இணையும் ஆன்மிகப் பற்றாளர்களுக்கு ஏற்பாட்டுக்குழுவினரால் அனைத்துத் தலங்களுக்கும் சென்று திரும்புவதற்கான போக்குவரத்து ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பயணத்தில் கலந்து கொள்பவர்கள் அனைவருக்கும் தேவையான மதிய உணவு மற்றும் சிற்றுண்டிகள் இலவசமாக வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-26-66)



# கடல்வழியாகக் கடத்தி வரப்பட்ட 5,386 'சம்போ' பைக்கற்றுகள் மீட்பு!

மன்னார்,ஜூலை 16

தலைமன்னார், உருமலை கடற்கரைப் பகுதியில் இலங்கை கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையின்போது, சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குள் கடத்திவரப்பட்ட பெருமளவிலான சம்போ பைக்கற்றுகள் கைப்பற்றப்பட்டுள்ளன. கிடைக்கப்பெற்ற இரகசியத்தகவலின் அடிப்படையில், கடற்படையினர் நேற்றுமுன்தினம் இந்தத் தேடுதல் நடவடிக்கையை முன்னெடுத்திருந்தனர். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் மற்றும் கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட படகுகள் குறித்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

# கோர விபத்தில் இருவர் சாவு!

கொழும்பு, ஜூலை 16

அநுராதபுரம், மிகிந்துபுர பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர். இந்த விபத்தில் படுகாயமடைந்த கர்ப்பிணிப் பெண் ஒருவர் அநுராதபுரம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். பாடசாலை மாணவர்களை ஏற்றிச் சென்ற 'சிசு சரிய' பேருந்துடன் மோட்டார் சைக்கிள் ஒன்று மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-இ)



# பிரதமர் ஹரிணி கட்டார் பயணம்!

கொழும்பு,ஜூலை 16

மறைந்த கட்டார் நாட்டின் முன்னாள் மன்னர் அமீர் ஷேக் ஹமத் பின் கலீஃபா அல் தானிக்கு இறுதி அஞ்சலி செலுத்துவதற்காக, பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய நேற்றுமுன்தினம் கட்டார் நோக்கிப் புறப்பட்டுச் சென்றுள்ளார். இந்த விஜயத்தின்போது, முன்னாள் மன்னர் அமீரின் மறைவு குறித்து இலங்கை அரசாங்கம் மற்றும் மக்கள் சார்பாக பிரதமர் தனது இரங்கலைத் தெரிவிக்கவுள்ளார். அத்துடன், எதிர்க்கட்சியைச் சேர்ந்த சில நாடாளுமன்ற உறுப்பினர்களும் அந்த இறுதிச் சடங்கில் கலந்துகொள்வதற்காக புறப்பட்டுச் சென்றுள்ளனர். (ச-இ)

# அஸ்வெசும விநியோகம்



கொழும்பு, ஜூலை 16

'அஸ்வெசும' நலன்புரிப் நன்மைகள் திட்டத்தின் கீழ், 2026 ஜூலை மாதத்துக்கான கொடுப்பனவுகள் நேற்று பயனாளிகளின் வங்கிக்கணக்குகளில் வைப்பிலிடப்பட்டுள்ளதாக நலன்புரி நன்மைகள் சபை அறிவித்துள்ளது. இதன் முதலாம் கட்டத்தின் கீழ், 1,012,812 பயனாளிக் குடும்பங்களுக்காக 9,357,346,250 ரூபா நிதி வங்கிக்கணக்குகளில் வைப்பிலிடப்பட்டுள்ளது. (ச-இ)

# ஏமாத்து எஸ்.எம்.எஸ்!

மோசடியள் பலவிதம், ஒவ்வொண்டும் ஒரு ரகம் எண்ட கணக்கில இப்ப புதுப்புது டிசைனில மோசடியள் வந்த படியிருக்குது. என்னதான் சனங்கள் அலேர்ட் ஆறுமுகம் மாதிரி கண்ணுக்க எண்ணெய் விட்டுக்கொண்டிருந்தாலும், அதுக்குள்ளாலையும் மோசடியளைச் செய்யிறதுக்கெண்டே ஒரு கூட்டம் இருக்கு. இந்த மோசடியளுக்கு மனிசரிட்ட இருக்கிற ரண்டே ரண்டு விசயத்தைத்தான் உவையள் தூண்டிலாப் பாவிக்கினம். ஒண்டு பேராசை, மற்றது பயம். 'உங்களுக்குக் கோடிக்கணக்கில காசு லொத்தரில விழுந்திருக்கு. அதை எடுக்க வரி கட்டினியள் எண்டா எடுக்கலாம்' 'வெளிநாட்டில இருந்து பெறுமதியான சங்கிலி, மோதிரம், எலக்ரிக்கல் சாமன்கள் பார்சலில வந்திருக்குது. இன்கம் ரக்ஸ் கட்டி எயார்போட்டால கிளியர் பண்ணித்தான் எடுக்கோனும். அதுக்கு நாங்கள் சொல்ற நம்பருக்கு 'ஈ-காஸ்' செய்து விடுங்கோ'

இப்பிடி சனத்தின்ர பேராசையைத் தூண்டி, அதை வைச்சு அவையை ஏமாத்தி லட்சக்கணக்கில காசைச் சுருட்டின சம்பவங்களைக் கேள்விப்பட்டிருப்பியள். ஆனால் இந்த ஏமாத்துவலைக்குள்ள சிக்குண்டு மாண்டுபோகாதையுங்கோ எண்டு பொலிஸும், மீடியாக்காரரும் படிச்சுப் படிச்சுச் சொன்னாலும் அதெல்லாம் எருமைமாட்டில மழை பெய்தமாதிரி சனத்தின்ர காதில ஏறுறதே இல்லை. 'உங்களுக்கு லொத்தரில காசு விழுந்திருக்கு' எண்டு ஏமாத்துக்காரர் போனில சொன்னதும், ஏதோ மகுடிக்கு மயங்கின பாம்பு மாதிரி வேற ஒண்டையும் யோசிக்காமல் அதை நம்பிறகுணம் இருக்கிற வரைக்கும் ஏமாத்திறவையின்ர காட்டில மழை கொட்டத்தானே செய்யும். எண்டாலும் ஒரேமாதிரி ஏமாத்திக் காசடிச்சால் எப்பிடியும் மாட்டுப்பட்டிடுவம் எண்டு அவங்களும் புதுப்புது ரெக்னிக்குகளை கண்டு பிடிச்சுக்கொண்டே இருக்கிறாங்கள். அதில இப்ப லேட்டஸ்ட்டா ஓடுற ஏமாத்துவேலை தான் மோட்டார் வாகனத் திணைக்களத்தின்ர பேரில நடக்கிற மோசடி.

'உங்கட வாகனத்துக்கு தண்டப்பணம் கட்டோனும்' 'உங்கட லைசென்ஸில குறைபாடு இருக்கு. அதை புதுப்பிக்கோனும்' எண்டு சொல்லி, அதுக்கான காசை ஒன்லைனில கட்டிறதுக்கு ஒரு லிங்கோட, மோட்டார் வாகனத் திணைக்களம் அனுப்பிற மாதிரி போலியான எஸ்.எம்.எஸ், போனுக்கு வரும். மோட்டார் ட்ரபிக் ஒப்பீஸுக்கு அலையிறதை விட பேசாமல் இப்பிடி ஒன்லைன்ல கட்டினால் சோலி முடிஞ்சுதெண்டுதான் கனபேர் நினைச்சு அந்த 'எஸ்.எம்.எஸில' இருக்கிற லிங்கை அனுப்பி தங்கட ஏ.ரி.எம். கார்ட் நம்பரையும், அதின்ர 'பின்' நம்பரையும் குடுப்பினம். அப்ப உங்கட போனுக்கு ஒரு ஓ.ரி.பி. நம்பர் (ஒருக்கா மட்டும் பாவிக்கிற கோட் நம்பர்) வரும். அதையும் அந்த லிங்கில பதிவு செய்தீங்களெண்டால் உங்கட அலுவல் முடிஞ்சுது. உங்கட பிரச்சினை தீர்ந்திட்டுது எண்டு நீங்கள் சந்தோசப்படேக்கையே, உங்கட எக்கவுண்டில இருக்கிற காசு முழுக்கலையும் வழிச்சுத் துடைச்சுக்கொண்டு போடுவாங்கள். அப்பிடிக் கனபேர் தங்கட காசைப் பறிகுடுத்திட்டு இப்ப பொலிஸ் ஸ்ரேசனுக்கு ஒவ்வொரு நாளும் ஏறி இறங்கிக்கொண்டிருக்கினமாம்.

அதால இனிமேல் இப்பிடி மோட்டார் வாகனத் திணைக்களத்தின்ர பேரில ஏதும் மெசெஜ் போனுக்கு வந்தால் அதை திறந்து பாக்கதையுங்கோ. வேணுமெண்டால் அதை மேலால பாருங்கோ, ஆனால் அதில இருக்கிற லிங்க் ஒண்டையும் அமத்தவேண்டாம். எதெண்டாலும் மோட்டார் வாகனத் திணைக்களத்துக்கு நேர போய் உங்கட அலுவலை முடியுங்கோ. இப்பிடி ஒன்லைனில காசு கட்டி அங்க ஒரு அலுவலும் செய்யேலாது எண்டதையும் அறிஞ்சு வைச்சிருங்கோ. இதைமாதிரி இனிமேல் வேற வேற டிப்பார்ட்மெண்டுகளின்ர பேரிலையும் ஏமாத்து 'எஸ்.எம்.எஸ்'கள்' வரலாம். எல்லாத்தையும் ஒருக்கா அலசி ஆராய்ஞ்சு, கண்டபடி லிங்குகளை அமத்தி, ஓ.ரி.பி.நம்பர்களைக் குடுத்து ஏமாறாமல் இருக்கிறதுதான் கெட்டித்தனம் கண்டியளோ!

padsi@uthayan.com -பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# LOLC ஜெனரல் இன்சூரன்ஸ், V ஹெல்ப் மூலம் வாகனக் காப்புறுதி அனுபவத்தை மறுவரையறை செய்கிறது.

புத்தாக்கம் மற்றும் வாடிக்கையாளர் மையத் தீர்வுகளுக்கான தனது அர்ப்பணிப்பைத் தொடரும்வகையில், LOLC ஜெனரல் இன்சூரன்ஸ் நிறுவனம், தகுதியுள்ள காப்புறுதிதாரர்களுக்கு நிபுணத்துவத் தொழில்நுட்ப வழிகாட்டுதல், வீதியோர உதவி மற்றும் பாரம்பரியக் காப்புறுதி வரம்பிற்கு அப்பாற்பட்ட கூடுதல் ஆதரவை வழங்கும் நோக்கில் வடிவமைக்கப்பட்ட மேம்படுத்தப்பட்ட மதிப்புக்கூட்டு சேவையான 'வி ஹெல்ப்' (V HELP) ஐ அறிமுகப்படுத்தி, தனது வாகனக் காப்புறுதித் திட்டத்தை வலுப்படுத்தியுள்ளது.

வி ஹெல்ப் (V HELP)மூலம், வாடிக்கையாளர்கள் LOLC ஜெனரல் இன்சூரன்ஸின் மோட்டார் இன்ஜினியரிங் பிரிவின் நிபுணத்துவத்தை நேரடியாக அணுகலாம். அங்கு, தகுதிவாய்ந்த பொறியாளர்கள் வாகனம் தொடர்பான பல்வேறு இயந்திர மற்றும் மின்சாரப் பிரச்சனைகளுக்குத் தொழில்முறை வழிகாட்டுதலை வழங்குகிறார்கள். இந்தச் சேவையானது, காப்புறுதிதாரர்கள் வாகனப் பிரச்சனைகளை நன்கு புரிந்துகொள்ளவும், தகவலறிந்த முடிவுகளை எடுக்கவும், மேலும் அவர்களின் பயணங்களில் ஏற்படும் சிரமங்களையும் இடையூறுகளையும் குறைப்பதற்கான சரியான நேரத்தில் உதவியைப் பெறவும் உதவுகிறது.

டேஷ்போர்டில் தோன்றும் எச்சரிக்கைக் குறியீடுகள், இயந்திரத்திலிருந்து எழும் அசாதாரண சத்தங்கள், வாகன அதிர்வுகள், டிரான்ஸ்மிஷன் தொடர்பான பிரச்சினைகள், மின்கலம் (பேட்டரி) கோளாறுகள், மின்சார அமைப்புப் பிழைகள் மற்றும் பிறதொழில்நுட்ப சிக்கல்கள் உள்ளிட்ட பல்வேறு விடயங்களில், இயன்றவரை தொலைநிலை மூலமாகவே வாடிக்கையாளர்களுக்கு நம்பகமான வழிகாட்டலையும் நிபுணத்துவ ஆலோசனைகளையும் V HELP வழங்குகிறது.

தகுதியுடைய காப்புறுதிதாரர்கள், 011 500 80 80 என்ற LOLC ஜெனரல் இன்சூரன்ஸின் உதவி அழைப்பு இலக்கத்துடன் தொடர்புகொண்டு V HELP சேவையைப் பெறலாம். அங்கு, வாகன பொறியியல் நிபுணர்கள் தெரிவிக்கப்பட்ட பிரச்சினைகளை மதிப்பீடு செய்து, அதற்கேற்ற பரிந்துரைகளையும் வழிகாட்டலையும் வழங்குவார்கள். நேரடி உதவி தேவைப்படும் சந்தர்ப்பங்களில், வாடிக்கையாளர்கள் LOLC ஜெனரல் இன்சூரன்ஸ் அங்கீகரிக்கப்பட்ட சேவை வழங்குநர்களைக் கொண்ட வீதி ஓர உதவி (Roadside Assistance) வலையமைப்புடன் உடனடியாக இணைக்கப்படுவார்கள். இதன் மூலம் பேட்டரிக்கு ஜம்ப்ஸ்டார்ட் வழங்குதல், பஞ்சரான டயரை மாற்றுதல், சிறிய அளவிலான இயந்திர உதவி, சிறிய மின்சார பழுதுபார்ப்பு மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பிற வீதி ஓர உதவிச் சேவைகள் வழங்கப்படுகின்றன.



திரு. கித்சிறி குணவர்தன,
தலைவர் ஃ முதன்மை அதிகாரி,
LOLC ஜெனரல் இன்சூரன்ஸ் பீஎல்சி



திரு. உதய குமார,
தலைமைச் செயல்பாட்டு அதிகாரி,
LOLC ஜெனரல் இன்சூரன்ஸ் பீஎல்சி

இந்தப் புதிய சேவையின் அறிமுகம் குறித்து கருத்துத் தெரிவித்த LOLC ஜெனரல் இன்சூரன்ஸ் பீஎல்சியின் தலைவர் முதன்மை அதிகாரி கித்சிறி குணவர்தன தெரிவித்ததாவது:- "காப்புறுதி என்பது பாரம்பரியப் பாதுகாப்பு என்ற கருத்தைத் தாண்டி, தொடர்ச்சியான ஈடுபாடு மற்றும் அர்த்தமுள்ள வாடிக்கையாளர் ஆதரவின் மூலம் மேலதிக பெறுமதியை உருவாக்கும் நோக்கில் பரிணமித்துவருகிறது. LOLC ஜெனரல் இன்சூரன்ஸ், எமது வாடிக்கையாளர்களின் மாறிவரும் எதிர்பார்ப்புகளை முன்கூட்டியே அறிந்து, நம்பிக்கையையும் உறுதியையும் வலுப்படுத்தும் தீர்வுகளை உருவாக்குவதில் நாம் கவனம் செலுத்திவருகிறோம். V HELP சேவையின் அறிமுகம், புதுமையின் மூலம் வாகனக் காப்புறுதித் துறையை மேலும் முன்னேற்றுவதற்கும், எமது காப்புறுதிதாரர்களுக்கு அதிக பெறுமதிமிக்க அனுபவத்தை வழங்குவதற்குமான எமது அர்ப்பணிப்பை வெளிப்படுத்துகிறது."

LOLC ஜெனரல் இன்சூரன்ஸ் பீஎல்சியின் தலைமைச் செயற்பாட்டு அதிகாரி உதய குமார மேலும் கூறியதாவது:- "ஒரு முழுமையான வாகனக் காப்புறுதிச் சூழலமைப்பை உருவாக்கும் எங்கள் பயணத்தில், V HELP இன் அறிமுகம் ஒரு குறிப்பிடத்தக்க படியாகும். தகுதியான கோரிக்கைகளை விரைவாகத் தீர்க்க உதவும் எங்களின் டிஜிற்றல் கோரிக்கை கண்டுபிடிப்பான V CLAIM இன் வெற்றிகரமான அறிமுகத்தைத் தொடர்ந்து, எங்கள் வாடிக்கையாளர்களுக்கு மிகவும் தடையற்ற மற்றும் உடனடியான சேவை அனுபவத்தை வழங்குவதற்கான எங்கள் திறனை V HELP மேலும் வலுப்படுத்துகிறது. இந்தத் தீர்வுகள் இணைந்து, தடையற்ற கோரிக்கை அனுபவம் முதல் வீதியோர உதவி மற்றும் நிபுணத்துவ தொழில்நுட்ப வழிகாட்டுதல் வரை, வாடிக்கையாளர்களின் பயணம் முழுவதும் அவர்களுக்கு விரிவான ஆதரவை வழங்குவதன் மூலம், எங்கள் வாகனக் காப்புறுதித் திட்டத்தை வேறுபடுத்திக் காட்டுகின்றன. இது இந்தத் துறையில் வாடிக்கையாளர் அனுபவத்திற்கான புதிய தரநிலையையும் உருவாக்குகின்றன."

இலங்கையின் முன்னணி பொதுக் காப்புறுதி நிறுவனங்களில் ஒன்றான LOLC ஜெனரல் இன்சூரன்ஸ், தொழில்நுட்பம், நிபுணத்துவம் மற்றும் தொடர்ச்சியான மேம்பாடுகள் ஆகியவற்றின் மூலம் தனது திறன்களை மேலும் வலுப்படுத்துவதில் தொடர்ந்து கவனம் செலுத்திவருகிறது. காப்புறுதிதாரர்களுக்கு நீடித்த பெறுமதியை உருவாக்கும் தீர்வுகளை வழங்குவதன் மூலம், சந்தையில் தனது முன்னணி நிலையை மேலும் உறுதிப்படுத்துவதோடு, இலங்கையின் பொதுக் காப்புறுதித் துறையில் நம்பகமான மற்றும் வாடிக்கையாளர்களின் விருப்பத் தேர்வான காப்புறுதி நிறுவனமாகத் திகழும் தனது அர்ப்பணிப்பையும் நிறுவனம் தொடர்ந்து வலியுறுத்திவருகிறது.

## இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** புதிய முயற்சிகள் இழுபறியாகும். தாயாரின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும். வீண் செலவுகள் எதுவும் ஏற்படுவதற்கில்லை. நண்பர்கள் மூலம் பண உதவி கிடைக்க வாய்ப்பு உண்டு.

**இடபம்:** இன்று மனதில் தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்த நாள். இளைய சகோதரர்கள் மூலம் ஆதாயம் கிடைக்கும். நினைத்த காரியங்கள் வெற்றிகரமாக நிறைவேறும்.

**மிதுனம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். வழக்கமான பணிகளிலும் கவனமாக இருக்கவும். உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைப்பது தாமதமாகும். அவ்வப்போது மனதில் குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும்.

**கடகம்:** உற்சாகமாகவும் பரபரப்பாகவும் செயற்படுவீர்கள். நினைத்த காரியத்தை நினைத்தபடி முடிப்பீர்கள். தேவையான அளவுக்கு பணம் இருப்பதால் செலவுகளைச் சமாளிப்பதில் சிரமம் எதுவும் இருக்காது.

**சிம்மம்:** அவசர முடிவுகளைத் தவிர்க்கவும். காரியங்களில் பொறுமை மிக அவசியம். அதிகரிக்கும் செலவுகளால் கையிருப்புக் கரையும். சிலருக்குக் கடன் வாங்கக்கூடிய சூழ்நிலையும் ஏற்படும். தந்தையின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும்.

**கன்னி:** பல வகைகளிலும் அனுகூலமான நாளாக இருக்கும். மனக்குழப்பங்கள் நீங்கி தெளிவு பிறக்கும். பிள்ளைகள் வகையில் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்க வாய்ப்பு உள்ளது.

**துலாம்:** தந்தையால் ஆதாயம் கிடைக்கும். அரசாங்கவகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும். இன்று நீங்கள் தொடங்கும் புதிய முயற்சி வெற்றிகரமாக நிறைவேறும்.

**விருச்சிகம்:** தந்தையுடன் வீண் மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்பு உள்ளதால், அவருடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். உறவினர்கள் மூலம் குடும்பத்தில் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும் என்பதால் கவனமாக இருக்கவும்.

**தனுசு:** புதிய முயற்சிகளைக் கண்டிப்பாகத் தவிர்த்துவிடவும். அவ்வப்போது சற்றுச்சோர்வு உண்டாகும். உறவினர்கள் தலையீடு காரணமாகக் குடும்பத்தில் குழப்பம் ஏற்பட்டு நீங்கும்.

**மகரம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். கணவன் – மனைவிக்கிடையே ஏற்பட்டு இருந்த கருத்துவேறுபாடு நீங்கி, அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**கும்பம்:** எதிர்பார்த்த பணம் கைக்குவரும். சகோதரர்கள் மூலம் ஆதாயம் உண்டாகும். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். முயற்சிகள் சாதகமாகும்.

**மீனம்:** ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். சிலருக்கு தெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும். தாயின் அன்பும் ஆதரவும் மனதுக்கு உற்சாகம் தரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# இப்போதில்லாவிட்டால் எப்போது?

முல்லைத்தீவில் உள்ள பாடசாலையொன்றில் இரு மாணவர் குழுக்களுக்கு இடையே ஏற்பட்ட முரண்பாடு, வகுப்பறைக்குள் புகுந்து இரும்புக்கம்பிகளால் சக மாணவர்கள் மீது கொடூரத் தாக்குதல் நடத்தும் அளவுக்கு விபரீதமாக மாறியுள்ள விவகாரம், ஒட்டுமொத்தச் சமூகத்தின் மனச்சாட்சியையும் உலுக்கியுள்ளது. தாக்குதலுக்குள்ளான மாணவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள அதேவேளை, தாக்குதலை நடத்தியவர்களான உயர்தரத்தில் கல்வி பயிலும் மூன்று மாணவர்கள் கைதுசெய்யப்பட்டு நீதவான் நீதிமன்ற உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். கல்வித்தாயின் உறைவிடமாகவும், ஒழுக்கத்தின் உன்னதக் கோட்டையாகவும் போற்றப்படவேண்டிய பாடசாலை வளாகங்கள், இன்று இரும்புக்கம்பிகளுடன் வன்முறைக் களங்களாக மாறுவதற்குக் காரணம் மாணவர்களிடையே சடுதியாகப் பரவி வரும் ஆபத்தான 'போதைப்பொருள் பாவனை' தான் என்பது ஆரம்பக்கட்ட விசாரணைகளில் வெளிவந்துள்ள கசப்பான உண்மையாகும்.

இன்றைய இளம் தலைமுறையினரை, குறிப்பாகப் பாடசாலை மாணவர்களைக் குறிவைத்துத் தமிழ் அமுலாக்கப் பிரதேசங்களில் திட்டமிட்ட முறையில் போதைப்பொருள் வலை விரிக்கப்பட்டுவருகின்றது. வறுமை, போருக்குப்பின்னரான உளவியல் பாதிப்புகள், முறையான வழிகாட்டலின்மை மற்றும் நவீன சமூக ஊடகங்களின் தவறான தாக்கம் போன்ற காரணிகளால் எமது பிள்ளைகள் மிக எளிதாகப் போதை அரக்கனின் பிடிக்குள் தள்ளப்படுகின்றனர். போதைப்பொருள் பாவனை என்பது ஒரு மனிதனின் பகுத்தறிவையும், சுயக்கட்டுப்பாட்டையும் முற்றாக அழித்துவிடுவதால், சிறு முரண்பாடுகள் கூடப் பயங்கரமான குழு மோதல்களாகவும் வன்முறைகளாகவும் வெடிக்கின்றன. பரீட்சைக்கூடங்களில் பேனாக்களைப் பிடிக்கவேண்டிய பிஞ்சு விரல்கள், போதையின் உச்சத்தில் இரும்புக்கம்பிகளையும் ஆயுதங்களையும் தூக்குவது ஒரு நாகரிகச் சமூகத்தின் , அதுவும் உரிமைக்காகப் போராடிய ஒரு இனத்தின் பெருவீழ்ச்சியாகும்.

இந்த விபரீத நிலையை மாற்றியமைக்கவேண்டுமாயின், வெறும் பொலிஸ் விசாரணைகளையும் சட்ட ஏற்பாடுகளையும் மட்டும் நம்பியிருக்கமுடியாது பலதரப்பட்ட கூட்டு உத்திகள் உடனடியாக நடைமுறைப்படுத்தப்படவேண்டும். முதலாவதாக, பாடசாலைச் சூழலுக்குள் போதைப்பொருள் ஊடுருவுவதைத் தடுக்க அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் பழைய மாணவர் சங்கங்கள் இணைந்து தீவிரக் கண்காணிப்புக்குழுக்களை உருவாக்க வேண்டும். சந்தேகத்துக்கிடமான முறையில் பாடசாலைப் பகுதிகளுக்கு அருகில் நடமாடும் நபர்கள் குறித்துப் பாதுகாப்புத் தரப்பினருக்கு உடனுக்குடன் தகவல் வழங்கப்படவேண்டும். பாடசாலைகளில் மாதந்தோறும் போதைப்பொருள் ஒழிப்பு மற்றும் அதன் ஆபத்துகள் குறித்த அறிவியல் பூர்வமான உளவியல் விழிப்புணர்வுப் பயிலமர்வுகள் கட்டாயமாக்கப்படவேண்டும்.

அதேபோல, பெற்றோரின் கண்காணிப்பும் இதில் இன்றியமையாத பங்கினை வகிக்கின்றது. தங்களின் பிள்ளைகளின் நடத்தையில் ஏற்படும் திடீர் மாற்றங்கள், தேவையற்ற பணப் புழக்கங்கள் மற்றும் அவர்களின் நட்பு வட்டாரங்கள் குறித்துப் பெற்றோர் விழிப்புடன் இருக்க வேண்டும். வீட்டில் காட்டும் அலட்சியமே, வகுப்பறையில் வன்முறையாக வெடிக்கிறது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. அரசாங்கமும் பாதுகாப்புத்துறையும் இந்த விவகாரத்தில் மெத்தனப் போக்கைக் கைவிட்டு, பாடசாலை மாணவர்களைக் குறிவைக்கும் போதைப்பொருள் விநியோகச் சங்கிலியை இரும்புக்கரம் கொண்டு அறுத்தெறியவேண்டும். எமது கல்வியகங்கள் வன்முறைக் கூடங்களாக உருமாறுவதைத் தடுத்து, தூய்மையான ஒழுக்கமுள்ளதொரு எதிர்காலச் சந்ததியை உருவாக்கச் சமூகத்தின் அனைத்துத் தரப்புகளும் இப்போதே கைகோர்த்து விழிப்படையவேண்டும். ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது. எனவே எமது இளம் சந்ததியை மாணவப் பருவத்திலேயே மாண்பானவர்களாக மாற்றாவிட்டால், எதிர்காலத்தில் ஒரு வன்முறைச் சமூகத்தை உருவாக்கிய பாவம் எம் அனைவரையுமே சாரும்!

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com






## பொய்யாமொழி

**இலமென்று வெஃகுதல் செய்யார் புலம்வென்ற
புன்மையில் காட்சி யவர்**

**பொருள்:** ஐம்புலன்களையும் வென்ற குற்றமில்லாத அறிவை உடையவர், "யாம் வறுமை அடைந்தோம்' என்று எண்ணியும் பிறர் பொருளை விரும்பார்.




# சிகரெட் வரி குறைப்பால் ரூ. 25 பில்லியன் இழப்பு




**கொழும்பு, ஜூலை 16**

**உலக சுகாதார நிறுவனத்தின் பரிந்துரைக்கு முரணாகச் சிகரெட் வரிகள் குறைக்கப்பட்டதால், கடந்த 2025ஆம் ஆண்டு முதல் இலங்கை அரசாங்கம் 25 பில்லியன் ரூபாவுக்கும் அதிகமான வரி வருமானத்தை இழந்துள்ளதாக 'வெரிட்டே ரிசர்ச்' நிறுவனம் தெரிவித்துள்ளது.**

இலங்கையில் தற்போதைய வரி சதவீதம் 67% ஆக வீழ்ச்சியடைந்துள்ளது.

இதனால் அரசாங்கத்துக்கு ஒவ்வொரு செக்கனுக்கும் 547 ரூபாவும், தினசரி 47.3 மில்லியன் ரூபாவும் வருமான இழப்பு ஏற்படுகின்றது. நடப்பு 2026ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் மாத்திரம் ஏற்பட்டுள்ள வரி வருமானப் பற்றாக்குறை 8 பில்லியன் ரூபாவைத் தாண்டியுள்ளது.

அரசாங்கம் உடனடியாக சிகரெட் மீதான கலால் வரிகளை உயர்த்துவதன் மூலம் புகையிலை நிறுவனங்களின் கொள்ளை இலாபத்தைக் கட்டுப்படுத்தி, இந்த நிதி இழப்பைத் தடுக்கமுடியும் எனப் பொருளாதார ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ச-இ)

## துப்பாக்கியுடன் ஒருவர் கைது!

கொழும்பு,ஜூலை 16

கைத்துப்பாக்கி ஒன்றுடன் சந்தேகநபரொருவர் மேல் மாகாண தெற்குக் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் மகரகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புகையிரத வீதிப் பகுதியில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் மகரகம, புகையிரத வீதிப்பகுதியைச் சேர்ந்த 22 வயதுடையவராவார். சம்பவம் தொடர்பில் மேல் மாகாண தெற்குக்குற்றப்புலனாய்வுப் பிரிவினர் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துவருகின்றனர். (ச-இ)

## மத்திய மாகாண ஆளுநர் பதவிவிலகல்!

கொழும்பு,ஜூலை 16

மத்திய மாகாண ஆளுநர் பேராசிரியர் சரத் அபேகோன்தனதுபதவியிலிருந்து விலகுவதற்கான கடிதத்தை ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க விடம் சமர்ப்பித்துள்ளார்.

தான் பதவியிலிருந்து விலகுவதற்கு எடுத்த முடிவு முற்றிலும் தனிப்பட்ட காரணம் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)



## சிறையில் வன்முறை; உயிரிழப்பு உயர்வு

கொழும்பு,ஜூலை 16

நீர்கொழும்பு சிறைச்சாலையில் அண்மையில் ஏற்பட்ட மோதல் சம்பவத்தில் பதிவாகிய உயிரிழப்புகளின் எண்ணிக்கையும் 31ஆக உயர்வடைந்துள்ளது. தீவிர சிகிச்சைப்பிரிவில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த மேலும் இரு சிறைக் காவலர்களே சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளனர். இந்த இரு அதிகாரிகளின் உயிரிழப்போடு மோதலில் உயிரிழந்த சிறைக் காவலர்களின் எண்ணிக்கை 10 ஆக அதிகரித்துள்ளது. (ச-இ)



# உயர்தர செய்முறைப் பரீட்சை மதிப்பீட்டுக்கு விண்ணப்பங்கள்

கொழும்பு,ஜூலை 16

2026ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையின் செய்முறைப் பரீட்சைகளுக்கான மதிப்பீட்டுக்குழு உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்த நடைமுறை எதிர்வரும் ஜூலை மாதம் 28ஆம் திகதி வரை இணைய வழியில் மாத்திரமே மேற்கொள்ளப்படும் எனப் பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது. இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் அதிகார பூர்வ இணையத்தளமான www.donets.lk அல்லது onlineexams.gov.lk.eic ஆகிய இணையத்தள முகவரிகளுக்குச் சென்று இதற்கான விண்ணப்பங்களை இணையவழியில் சமர்ப்பிக்கவேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## கயிறு இழுத்தல் போட்டியில் கிளிநொச்சி அணி சம்பியன்

யாழ்ப்பாணம், ஜூலை 16

நன்னடத்தை பாதுகாப்பு மற்றும் சிறுவர் கண்காணிப்பு சேவைகள் திணைக்களம் நடத்தும் சிறுவர் அபிவிருத்தி நிலையங்களுக்கு இடையிலான, மாகாணமட்ட ஆண்களுக்கான கயிறு இழுத்தல் போட்டியில், கிளிநொச்சி மாவட்ட அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது. சிறுவர் அபிவிருத்தி நிலையங்களுக்கு இடையிலான மாகாணமட்ட ஆண்களுக்கான கயிறு இழுத்தல் போட்டி யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் கிளிநொச்சி மாவட்ட அணியை எதிர்த்து வவுனியா மாவட்ட அணி மோதியது. இதில் கிளிநொச்சி மாவட்ட அணி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது. (க-422)



## உதைபந்தாட்டப் போட்டியில் செபஸ்ரியான் அணி வெற்றி

யாழ்ப்பாணம், ஜூலை 16

வடமராட்சிக் கிழக்கு வத்திராயன் உதயசூரியன் விளையாட்டுக்கழகத்தின், உதைபந்தாட்ட வெற்றிக்கிண்ணம், உதைபந்தாட்டத் தொடரின் இரண்டாவது போட்டியில் வெற்றிலைக்கேணி சென். செபஸ்ரியான் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றது. சென். செபஸ்ரியான் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து வெற்றிலைக் கேணி றம்போ விளையாட்டுக்கழகம் மோதியது. இந்தப் போட்டியில் வெற்றிலைக்கேணி சென். செபஸ்ரியான் விளையாட்டுக்கழகமானது 1 : 0 எனும் கோல் கணக்கில் வெற்றியைமத் தமதாக்கியது. (க-80)





## தூய ஒளிக்கிண்ணம் போட்டியில் கொற்றாவத்தை றேஞ்சஸ் வெற்றி

யாழ்ப்பாணம், ஜூலை 16

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனம் மற்றும் யாழ். உதைபந்தாட்ட லீக் அனுமதியுடன், குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 11 நபர் கொண்ட வடமாகாண ரீதியிலான தூய ஒளிக்கிண்ணம் உதைபந்தாட்டத் தொடரில் கொற்றாவத்தை றேஞ்சஸ் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது. லீக் போட்டியில் கொற்றாவத்தை றேஞ்சஸ் அணியை எதிர்த்து பாசையூர் சென். அன்ரனீஸ் அணி மோதியது. ஆட்டநேர முடிவில் 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று லீக் சுற்றின் முதலாவது வெற்றியை கொற்றாவத்தை றேஞ்சஸ் அணி பதிவுசெய்தது. (க)



## சென்.மேரிஸ் அணி இரண்டாவது வெற்றி

யாழ்ப்பாணம், ஜூலை 16எ

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனம் மற்றும் யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழகம் நடத்தும், வடமாகாண ரீதியிலான தூய ஒளிக்கிண்ணம் உதைபந்தாட்டத் தொடரில், நாவந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக்கழக அணி இரண்டாவது வெற்றியைப் பதிவுசெய்தது. லீக் போட்டியில் சக்கோட்டை சென். சேவியர் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து சென். மேரிஸ் விளையாட்டுக்கழக அணி மோதியது. ஆட்டநேர முடிவில் 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று லீக் சுற்றில் இரண்டாவது வெற்றியைப் பதிவுசெய்தது சென். மேரிஸ் அணி. (க)




## கபடிப் போட்டிக்கான வீரர்கள் ஏலம் எடுப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 16

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் நடத்தவுள்ள யுனைட்டெட் கபடி பிறீமியர் லீக் போட்டிகளுக்கான வீரர்களை ஏலம் எடுக்கும் நிகழ்வு, பருத்தித்துறை சூரியமஹால் மண்டபத்தில் கடந்த திங்கட்கிழமை இரவு இடம்பெற்றது. இந்தப் போட்டிக்கு, வடமராட்சிப் பிரதேசத்துக்குட்பட்ட 62 கபடி வீரர்கள் விண்ணப்பித்திருந்தனர். (க-100)

## கரப்பந்தாட்ட இறுதிப்போட்டி; பலப்பரீட்சையில் 4 அணிகள்

அரியாலை திருமகள் சனசமூக நிலையத்தின் பவளவிழாவை முன்னிட்டு நடத்தப்படும், யாழ். மாவட்ட அணிகளுக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டிகள் இன்று வியாழக்கிழமை நடைபெறவுள்ளன. சரவணமுத்து, சின்னம்மா மற்றும் ஐ.ரத்தினசேகரம் அசன் ஞாபகார்த்தமாக, ச.பாஸ்கரன், ச.கிருபாகரன் மற்றும் இ.தெசன் அனுசரணையில் B பிரிவு அணிகளுக்கான இறுதிப்போட்டி இரவு 6.30 மணிக்கு நடைபெறும். இதில் புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழக அணி எதிர் அளவெட்டி மத்திய விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளன. நல்லையா சதீஸ் ஞாபகார்த்தமாக, இராஜ ணம் யாழினி பிரானஸ் நல்லையா, சுதேஸ்குமார் ஜெயக்குமார் யசிந்தா அனுசரணையில் A பிரிவு அணிகளுக்கான இறுதிப்போட்டி இரவு 7.30 மணிக்கு இடம்பெறும். இதில் யாழ். பல்கலைக்கழக அணி எதிர் ஆவரங்கால் இந்து இளைஞன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளன. (க)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அரசியல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஜூலை 16

புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் 48 ஆவது ஆண்டை நினைவுகூர்ந்து 'இன்றைய அரசியல் நிலைமைகளும் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளும்' எனும் தொனிப்பொருளில் பகிரங்க அரசியல் கருத்தரங்கு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் கே.கே.எஸ்.வீதி, கொக்குவிலில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

மூத்த இடதுசாரியும், புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் பொதுச் செயலாளருமான சி.கா.செந்திவேல் தலைமையில் இடம்பெறும் கருத்தரங்கில் மூத்த இடதுசாரி இலக்கியவாதியும், தாயகம் சஞ்சிகையின் பிரதம ஆசிரியருமான க.தணிகாசலம், கட்சியின் தேசிய அமைப்பாளர் வெ.மகேந்திரன், கட்சியின் அரசியற்குழு உறுப்பினர்களான டேவிட் சுரேன், நீ.பிரதீபன், இளைஞர் முன்னணியின் செயலாளர் க.ஜிந்தீசன், பெண் விடுதலைச் சிந்தனை அமைப்பின் செயலாளர் நி.பிரசாந்தினி, கட்சியின் வடபிராந்தியச் செயலாளர் கா.செல்வம் கதிர்காமநாதன், சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பின் செயலாளர் கு.சாரங்கன், சமூக நீதிக்கான மலையக வெகுஜன அமைப்பின் செயற்பாட்டாளர் பஸ்மிர் புஹாரி ஆகியோர் கலந்து கொண்டு கருத்தரங்க உரைகளை நிகழ்த்துவர். குறு நாடகம் மற்றும் இசை நிகழ்த்துகைகளும் இடம்பெறும். நிகழ்வில் அரசியல், சமூக ஆர்வலர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர்.

(சு-66)


## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

பிரம்மன் மகிழ்வில் 15 • 11 • 1934



உருத்திரன் அழைப்பில் 14 • 06 • 2026

கடந்த 14.06.2026 ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

### அமரர் கந்தையா சின்னத்துரை

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (16.07.2026) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் உங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

மின்சார நிலைய வீதி,
சுன்னாகம் தெற்கு.

குடும்பத்தினர்

(cr. 44711) (N-1)



ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

பிறப்பு 18 • 09 • 1949



இறப்பு 16 • 06 • 2026

கடந்த 16.06.2026 செவ்வாய்க்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

### அமரர் சம்பந்தர் குகமூர்த்தி

(வைத்தியர முறிவுநோவு)

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (16.07.2026) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல.20, செம்மணி வீதி, நல்லூர்
077 8740 462

குடும்பத்தினர்

(cs 32128) (N-1)



## வாசல் கதவு, கேற் விற்பனைக்குண்டு

பாவித்த நல்ல நிலையில் உள்ள
தேக்கு மர வாசல் கதவு
மற்றும் பாகிஸ்தான்
பைப்பிலான Double கேற்
விற்பனைக்குண்டு

077 443 5414

(cs61886) NN



## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
## பழைய மாணவர் சங்கம்
## விசேட பொதுக்கூட்டம்

29.07.2026 புதன்கிழமை காலை 09.30மணி

எமது சங்கத்தின் விசேட பொதுக்கூட்டமானது 29.07.2026 புதன்கிழமை காலை 09.30 மணிக்கு கல்லூரி சபாலிங்கம் அரங்கத்தில் நடைபெறவுள்ளது. அதில் பின்வரும் விடயங்கள் ஆராயப்படும்

# அதிபரின் கோரிக்கை
# சங்கம் எதிர் நோக்கியுள்ள நெருக்கடி
# தேர்தல் விதிமுறைகள் திருத்தம்

அனைத்து அங்கத்தவர்களையும் கலந்துகொள்ளுமாறு அழைக்கின்றோம்.

செயலாளர்,
பழைய மாணவர் சங்கம்,
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.

15-07-2026



## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள தானியங்கி கோழிப்பண்ணைக்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.

1. கோழிப்பண்ணை மேற்பார்வையாளர்
   (Poultry farm Supervisor)
   (G.C.E A/L Bio or B.Tech Stream)
2. கோழிப்பண்ணை உதவியாளர் (Farm Helper)

தங்குமிட வசதி உட்பட கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.


தொடர்புக்கு: WhatsApp - 077 336 6860
Email - allaivita2025@gmail.com

(CS 32157) A



## மரண அறிவித்தல்

பிறப்பு 29 • 01 • 1948



இறப்பு 15 • 07 • 2026

### அந்தோனிப்பிள்ளை பிரான்சிஸ் சந்திரா

(கெமிக்கல் சந்திரன் - திருவையாறு)

நெடுந்தீவை பூர்வீகமாகவும் யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் திருவையாறு கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட பிரான்சிஸ் சந்திரா அவர்கள் நேற்று (15.07.2026) புதன்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை - மேரிதிரேசா தம்பதியரின் அருமை மகனும், காலஞ்சென்றவர்களான மரியாம்பிள்ளை - மேரி விக்ரோறியா தம்பதியரின் அன்பு மருமகனும், பற்றிமா மெரி அவர்களின் பாசமிகு கணவரும், சத்தியசோதி (பிரதேச செயலர் தென்மராச்சி, பிரதி பிரதேச செயலர் வடமராச்சி கிழக்கு), காலஞ்சென்ற சர்வானந்தா, தயானந்தா (கனடா), நித்தியானந்தா (கிளிநொச்சி நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை) ஆகியோரின் அன்பு தந்தையும், வித்தியா (வடமாகாண பொது சேவை ஆணைக்குழு அபிவிருத்தி உத்தியோகத்தர்), துர்க்கா (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், மரிசா, கௌடில்யன், ஆதிரா ஆகியோரின் அன்புநிறை பேரனும், காலஞ்சென்ற யோசவ்வின், இம்மானுவேல், எமிலியானுஸ், பிள்ளை (எமில்), மேரி பூமணி, பெனிக்னா நவமணி ஆகியோரின் பாசமிகு சகோதரரும், காலஞ்சென்ற ஜெறோம்விறாங், லியோ ஜொய்ஸ் (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை நிகழ்வுகட்காக திருவையாறு கிளிநொச்சியில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் இருந்து இன்று (16.07.2026) வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் அவரது புகளுடல் எடுத்து செல்லப்பட்டு கிளிநொச்சி திரேசா ஆலயத்தில் இரங்கல் திருப்பலி நிறைவேற்றப்பட்டு, புனித திரேசா ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

தகவல்: குடும்பத்தினர்.

(CS 32158) A


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வல்வை ஒன்றியம் பெருமையுடன் நடத்திய வல்வெட்டித்துறை கோடைகாலப் பெரு விளையாட்டு விழாவில், பெண்களுக்கான உதைப்பந்தாட்ட இறுதிப் போட்டியில், பொலிகை பாரதி மகளிர் அணி சாம்பியன் பட்டத்தை சுவீகரித்தது. (சு)



நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டு நடக்க முடியாமல் அவதிப்பட்டுவரும், தாயக எழுச்சிப் பாடகர் சுகுமாருக்கு, புதிய சக்கர நாற்காலி, நல்லூரிலுள்ள அவரது இல்லத்துக்கு நேரடியாகச் சென்று நேற்று வழங்கப்பட்டது. தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் யாழ்.மாநகரசபை நல்லூர் இராசதானி நான்காம் வட்டார உறுப்பினர் சந்திரசேகரம் இராஜகுமாரின் நிதிப்பங்களிப்பில் இந்த உதவி வழங்கப்பட்டது. (சு-66)



## மணிவண்ணன் நினைவுக்கிண்ணம் தனதாக்கியது தியோகுநகர் அலைகள்

முல்லைத்தீவு,ஜூலை 16

முள்ளியவளை நாவல்காடு, ஐயங்கரன் விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்பட்ட அமரர் மணிவண்ணன் நினைவுக்கிண்ண கால்பந்தாட்டச் சுற்றுத்தொடரில் தியோகுநகர் அலைகள் விளையாட்டுக்கழகம் வெற்றிபெற்று கிண்ணத்தை சுவீகரித்தது. ஐயங்கரன் விளையாட்டுக்கழகத் தலைவர் செல்வக்குமார் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் பங்கேற்றார். குறித்த கால்பந்தாட்டச் சுற்றுத்தொடரின் இறுதிப்போட்டியில் வற்றாப்பளை செந்தமிழ் விளையாட்டுக்கழக அணியும், தியோகுநகர் அலைகள் விளையாட்டுக்கழக அணியும் மோதின. (ச-246)



## சித்திரம், துரித கணிதப் போட்டியில், நயினாதீவு மாணவர்கள் முன்னிலை

யாழ்ப்பாணம்,ஜூலை 16

வலயமட்ட சித்திரம் மற்றும் துரித கணிதப் போட்டியில், நயினாதீவு ஸ்ரீ கணேச கனிஷ்ட மகாவித்தியாலய மாணவர்கள் சிறப்பான வெற்றிகளைப் பெற்றுள்ளனர். சித்திரப் போட்டியில் சு.அம்சவி முதலாம் இடத்தைப் பெற்று மாகாணமட்டப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளார். அதேவேளைதுரித கணிதப் போட்டியில் வி. கிஷான் இரண்டாமிடத்தையும், வி. ஷர்விகன் நான்காம் இடத்தையும் பெற்றுள்ளனர். (சு)


சாவகச்சேரி சங்கத்தானை முருகமூர்த்தி கோவில் பெருந்திருவிழாவின் தேர்த்திருவிழா நேற்று அண்மையில் பக்திபூர்வமாக நடைபெற்றது. (ச-9)







## டெங்கு விழிப்புணர்வு



யாழ்ப்பாணம்,ஜூலை 16

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையில் டெங்கு தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கை நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்டது. பருத்தித்துறை நகரசபை பொதுச்சுகாதாரப் பரிசோதகர் ப.தினேஸால் மாணவர்களிடையே டெங்கு தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதில் இலங்கை செஞ்சிலுவைச் சங்க அங்கத்தவர்களும் பங்குபற்றியிருந்தனர். (சு-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதித்துறையைப் பாதுகாக்க எதிர்க்கட்சிகள் ஒன்றிணைக!

## பெரமுன அழைப்பு

கொழும்பு,ஜூலை 16

**நாட்டின் உயர்நீதிமன்ற நீதியரசர்களின் ஓய்வுபெறும் வயதெல்லையை நீடிப்பதற்கு தற்போதைய அரசாங்கம் எடுத்துவரும் முயற்சிக்கு எதிராக, நாடாளுமன்றத்தில் உள்ள அனைத்து எதிர்க்கட்சிகளும் ஓரணியில் திரளவேண்டும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அழைப்பு விடுத்துள்ளது.**

இதுகுறித்துப் பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளரும் சட்டத்தரணியுமான சாகர காரியவசம் தெரிவிக்கையில், அரசாங்கத்தின் இந்த நடவடிக்கை நாட்டின் ஜனநாயகத்திற்கு விடுக்கப்பட்ட பாரதூரமான அச்சுறுத்தல். அரசாங்கத்தின் இத்தகைய முயற்சி ஒரு வெட்கக்கேடான செயலாகும். தங்களது குறுகிய அரசியல் நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ளவே நீதிபதிகளை வளைக்க அரசாங்கம் இவ்வாறான தந்திரோபாய நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றது. ஓய்வுபெறும் வயதெல்லையைத் தன்னிச்சையாக நீடிப்பதன் மூலம் உயர்நீதிமன்ற நீதியரசர் களின் சுதந்திரமான செயற்பாடுகள் பாதிக்கப்படும் என்பதுடன், அது ஒட்டுமொத்த நீதித்துறையின் சுயாதீனத் தையே முற்றாகக் கேள்விக்குட்படுத்தும். அரசாங்கத்தின் இந்த ஆபத்தான முன்மொழிவுக்கு எதிராகப் பொதுமக்கள் மத்தியிலும், சிவில் அமைப்புகள் மத்தியிலும் கடும்எதிர்ப்பு எழுந்துள்ளது. எனவே நாட்டின் ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்கு அனைத்து எதிர்க்கட்சிகளும் கட்சிபேதமின்றி ஒன்றிணைய வேண்டும் - என்றார். (ச-இ)

# சிறை செல்லும் அச்சத்தில் வரி செலுத்துவோர் அதிகம்

## அமைச்சர் பிமல் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை 16

சிறை செல்ல நேரிடும் என்ற அச்சத்தில், செல்வந்தர்கள் பலர் தாமாகவே முன்வந்து வரிகளைச் செலுத்துவதால், நாட்டின் அபிவிருத்தியை எம்மால் முன்னெடுத்துச் செல்ல முடிகின்றது என்று நெடுஞ்சாலைகள் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார். உரும்பிராயில் புனரமைக்கப்பட்ட வீதியை மக்களுக்குக் கையளிக்கும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. தொடர்ந்து நடைபெற்ற மக்கள் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், பொதுமக்களின் பணத்தை வீணடிக்காமல், அவர்களுக்குப் பயன்தரும் திட்டங்களுக்கு அதனைச் சரியாகச் செலவிடவேண்டும் என்பதே அரசாங்கத்தின் நோக்கம். அவ்வாறு நிதி ஒதுக்கப்பட்டாலும், மக்களுக்குத் தேவையான அந்த வேலைகளை உரிய நேரத்தில், அதே வேகத்துடன் செய்து முடிப்பதில், சில இடங்களில் எம்மால் இயலாமல் போகின்றது. அதற்கு சில தடைகளும் காணப்படுகின்றன. அதுதொடர்பில் ஆராய்ந்துவருகின்றோம். கடந்த காலங்களில் வரி செலுத்தாதோர், தற்போது தாமாகவே முன்வந்து வரி செலுத்துகின்றனர். ஏனென்றால் வரி செலுத்தாதவர்கள் சிறைச்சாலை செல்ல நேரிடும் என்ற பயம். இதனால் எம்மால் அபிவிருத்தியைச் செய்யமுடிகின்றது அதுமட்டுமல்லாமல், பெரிய அளவில் ஊழல்கள் மற்றும் நிதி மோசடிகள் செய்தவர்களுக்கு உரிய தண்டனைகள் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இலஞ்ச ஒழிப்பு ஆணைக் குழு, பொலிஸ், நீதிமன்றம் ஆகியவை ஊழல் செய்தவர்களை எந்தத் தராதமும் பார்க்காமல் தண்டனைக்கு உட்படுத்தும் முயற்சியில் முன்னின்று செயல்படுவதால், பல ஊழல்கள் இன்று குறைந்துள்ளன- என்றார். (க-26)

# சட்டவிரோத வாக்களிப்பு; யாழ். தம்பதியினர் கைது!

சென்னை, ஜூலை 16

முறையான குடியுரிமை ஆவணங்கள் இன்றி, போலியான முகவரி ஆதாரங்களை வழங்கி இந்திய வாக்காளர் அடையாள அட்டையைப் பெற்று, தேர்தலில் வாக்களித்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தம்பதியினர் சென்னை விமானநிலையத்தில் வைத்து அதிரடியாகக் கைதுசெய்யப்பட்டனர்.

கடந்த 20 வருடங்களாகச் சென்னை தியாகராயநகரில் வசித்துவந்த இந்தத் தம்பதியினர், அண்மையில் நடந்த தமிழகச் சட்டமன்றத் தேர்தலில் வாக்களித்ததை அதிகாரிகள் கண்டுபிடித்தனர்.

இந்தநிலையில், அவர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமைசென்னை வழியாக மீண்டும் இலங்கை திரும்ப முயன்றபோது விமானநிலையப் பாதுகாப்பு அதிகாரிகளால் மடக்கிப் பிடிக்கப்பட்டனர். (அ, இ)



# வணக்கஸ்தலங்களில் டெங்கு விழிப்புணர்வு

பருத்தித்துறை நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளிலுள்ள வணக்கஸ்தலங்களில், டெங்கு தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கை கடந்த ஞாயிற்றுக்கிழமை முன்னெடுக்கப்பட்டது. இதன்போது டெங்குக் காய்ச்சல், டெங்குக் காய்ச்சலின் அறிகுறிகள் மற்றும் டெங்குத்தொற்றில் இருந்து பாதுகாக்க மேற்கொள்ள வேண்டிய நடைமுறைகள் தொடர்பாக, பருத்தித்துறை நகரசபையின் பொதுச்சுகாதாரப் பரிசோதகர் ப.தினேஸ் விளக்கமளித்தார். (க-100)

# தெய்வீகப்பேருரை

யாழ்ப்பாணம்,ஜூலை 16

மறவன்புலோ மத்தி ஸ்ரீ நித்தர்புலம் செல்வமுத்து மாரியம்மன் ஆலயத்தின் மண்டலாபிஷேகப் பூர்த்தி விழா இன்று வியாழக்கிழமை இடம்பெறவுள்ளது. அம்பாளுக்கு 1008 சங்காபிஷேக வழிபாடுகள் இடம்பெற்று, திருவீதியுலாவரும் திருக்காட்சி இடம்பெறும். தொடர்ந்து மதுரகவி காரை எம்.பி.அருளானந்தம் 'சங்காபிஷேக மகத்துவ' எனும் விடயப்பொருளில் தெய்வீகப் பேருரை ஆற்றுவார். (க)



# டெங்கு சிவப்பு எச்சரிக்கை உதாசீனம்; நால்வருக்குத் தலா ரூ.10,000 தண்டம்!

டெங்கு நுளம்பு பெருகும்வகையில் தங்களது சூழலை வைத்திருந்ததற்காகவும், பொதுச் சுகாதாரப் பிரிவினரால் வழங்கப்பட்ட டெங்கு சிவப்பு அறிவித்தலை உதாசீனம் செய்ததற்காகவும் நான்கு குடியிருப்பாளர்களுக்கு முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றம் தலா 10,000 ரூபா வீதம் தண்டப்பணம் விதித்துத் தீர்ப்பளித்துள்ளது. முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்குட்பட்ட ஒட்டுசுட்டான் மற்றும் மாங்குளம் பகுதிகளில்டெங்கு ஒழிப்புப்பிரிவினரால் அண்மையில் வீடுகள் மற்றும் வர்த்தக நிறுவனங்கள் வளாகங்களில் தீவிர சோதனைகள் நடத்தப்பட்டன. இதன்போது, நுளம்பு பெருகக்கூடியவகையில் அசுத்தமாகக் காணப்பட்ட வீடுகள் மற்றும் வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்களுக்கு, அவற்றை உடனடியாகத் துப்புரவுசெய்யுமாறு பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் சிவப்பு எச்சரிக்கை அறிவித்தல்கள் வழங்கப்பட்டிருந்தன.

எனினும், நான்கு குடியிருப்பாளர்கள் சிவப்பு அறிவித்தலை முற்றாக உதாசீனம் செய்ததுடன், நுளம்பு பெருகும் இடங்களைத் துப்புரவுசெய்ய எவ்வித வழிமுறைகளையும் கடைப்பிடிக்கத் தவறியிருந்த நிலையில் அவர்களுக்கு எதிராக, ஒட்டுசுட்டான் பகுதி பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கு அண்மையில் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, சம்பந்தப்பட்ட நான்கு குடியிருப்பாளர்களும் தங்களது குற்றத்தை நீதிமன்றில் ஒப்புக்கொண்டதையடுத்து நால்வருக்கும் தலா 10 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டது. அத்துடன், நுளம்புகள் பெருகியுள்ள தங்களது குடியிருப்பு வளாகங்களை உடனடியாகத் துப்புனரவு செய்ய வேண்டும் எனவும் அவர்களுக்குக் கடுமையான எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ச-9)

# சனசமூக நிலையத்துக்கு 3 தையல் இயந்திரங்கள்

யாழ்ப்பாண பிரதேச செயலகத்தால், யாழ்.கிறீன்பில்ட்சனசமூகநிலையத்துக்கு, 3 தையல் இயந்திரங்கள் கடந்த திங்கட்கிழமை வழங்கப்பட்டன. யாழ்.பிரதேச செயலர் சிவகாமி உமாகாந்தன், சனசமூக நிலையச் செயலாளிடம் இயந்திரங்களைக் கையளித்தார். இதற்கான நிதியுதவியை நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வழங்கியுள்ளார். (க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

B





குப்பிழான் சொக்கவளவு சோதிவிநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் தேர்த்திருவிழா கடந்த திங்கட்கிழமை நூற்றுக்கணக் கான அடியவர்களின் பங்கேற்புடன் பக்திபூர்வமாக இடம் பெற்றது. (ச-41-66)

# நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூலை 16

பொ.ஐங்கரநேசனின் 'வேர்முகங்கள்'நூல், தமிழகத்தில் பொன்னி பதிப்பகத்தால் அண்மையில் வெளியிடப்பட்டது. பொ. ஐங்கரநேசன் செவ்வி கண்ட கலை, இலக்கிய ஆளுமைகள் 19 பேரின் நேர்காணல்கள் அடங்கிய தொகுப்பு வேர்முகங்கள் என்ற பெயரில் சாளரம் பதிப்பகத்தால் 2006ஆம் ஆண்டு வெளியிட்டிருந்தது.

தற்போது வேர்முகங்கள் நூலை 3ஆவது வெளியீடாக சென்னையில் பொன்னி பதிப்பகம் வெளியிட்டுள்ளது. (க-27)

# உயர்தர மாணவர்களுக்கு சுயகற்றல் கையேடுகள்

யாழ்ப்பாணம்,ஜூலை 16

வெண்கரம் அறக்கட்டளையின் ஏற்பாட்டில், உயர் கல்வி விரிவாக்க மீள் எழுகை ஆற்றுப்படுத்தல் எனும் தொனிப்பொருளில், உயர்தர மாணவர்களுக்குசுய கற்றல் கையேடுகள் வழங்கும் நிகழ்வு சித்தங்கேணி அறக்கட்டளையின் அலுவலகத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. வெண்கரம் அறக்கட்டளையின் பிரதான செயற்பாட்டாளர்கள் இணைந்து சுயகற்றல் கையேடுகளை வெளியிட்டு வைத்தனர்.

இந்தச் செயற்பாட்டுக்கான அனுசரணையை அமெரிக்கா முத்தமிழ் முன்னேற்றமன்றம், ஈகை குழுமம், வட அமெரிக்கா இலங்கை தமிழ்ப் பெண்கள் வலையமைப்பு ஆகியன வழங்கியுள்ளன. (க-27)



மன்னார் மாவட்ட சமுர்த்தி உத்தியோகத்தர் மற்றும் விவசாய ஆராய்ச்சி உத்தியோகத்தர் தொழிற்சங்கத்தின் தேசிய மாநாடு, மன்னார் நகர் பிரதேச செயலகத்தின் கேட்போர் கூட மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. மாநாட்டில் அகில இலங்கை தொழிற்சங்கத்தால் முன்னெடுக்கப்பட்டுவரும் வேலைத்திட்டங்கள், மன்னார் மாவட்ட சமுர்த்தி உத்தியோகத்தர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டன. (க-60)



# தூயஒளி கிண்ண உதைபந்தாட்டத்தில் சென்.நீக்கிலஸ் அணி முதல் வெற்றி

யாழ்ப்பாணம்,ஜூலை 16

குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழகம் நடத்தும், வடமாகாண ரீதியிலான அணிக்கு 11 பேர் கொண்ட தூயஒளி கிண்ண உதைபந்தாட்டத் தொடரின், முதலாவது லீக் போட்டியில் நாவந்துறை சென்.நீக்கிலஸ் அணி வெற்றிபெற்றது. சென்நீக்கிலஸ் அணி மணற்காடு சென்.அன்ரனிஸ் அணியை எதிர்த்து விளையாடியது.போட்டி நேர முடிவில் சென்.நீக்கிலஸ் அணி 30 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று லீக் சுற்றின் முதலாவது வெற்றியைப் பதிவு செய்தது. (க)





இணுவில் கந்தசுவாமி ஆலயத்தில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற தீர்த்தத் திருவிழாவில், நூற்றுக்கணக்கான காவடிகளுடன் பக்தர்கள் தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றினர்.(க-25)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வீரவன்ஸவின் சகோதரர் கைது!

கொழும்பு,ஜூலை 16
தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான விமல் வீரவன்ஸவின் சகோதரரான சரத் வீரவன்ஸ, குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.
அரசுப் பொறியியல் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான உத்தியோகபூர்வ வாகனங்களை, எந்தவொரு சட்டபூர்வ அனுமதியும் இன்றி முறையற்ற மற்றும் சட்டவிரோதமான முறையில் பயன்படுத்தியதாகக் கூறப்படும் ஊழல் சம்பவம் தொடர்பிலேயே அவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. (அ-இ)

## கழிவு மீன்...

போராட்டத்தில் ஈடுபட்டனர்.
'ஆரம்பத்தில் கழிவுகளைத் தரம் பிரித்து உரமாக்குவதாகக் கூறி அமைக்கப்பட்ட இந்த மையம், தற்போது தரம் பிரிக்கப்படாத குப்பை மேடாக மாறியுள்ளது. மலசல கூட கழிவுகள் , தனியார் உணவகங்கள் , தங்குமிட கழிவு நீர் என்பவற்றை வடிகட்டும் செயற்பாடு நடைபெற்றது. தற்போது அவை உரிய முறையில் வடிகட்டாமல் நீரினை அங்குள்ள வாய்க்காலுக்குள் விடுவதனால், அருகில் உள்ள நாம் பல நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்கிறோம்.
இதனால் அந்தப்பகுதியில் கடும் துர்நாற்றம் வீசுவதுடன், குடிநீர் கிணறுகளும் மாசடைந்துள்ளன. வீடுகளில் இலையான் தொல்லை அதிகரித்து, மக்கள் உணவருந்தக் கூட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. மேலும், அண்மையில் இந்தக் கழிவு மீள் சுழற்சி மையம் தீப்பற்றி எரிந்ததால் ஏற்பட்ட நச்சுப் புகையால் மக்கள் இடம்பெயர நேரிட்டது. 25க்கும் மேற்பட்ட குழந்தைகள் மற்றும் ஆஸ்துமா நோயாளிகள் காக்கைதீவுப் பகுதியில் உள்ளனர். எமக்கு அண்மைக்காலமாக ஏற்படும் தொற்றா நோய்களுக்கு இந்தக் கழிவு மீள் சுழற்சி மையத்தால் ஏற்படும் சுகாதாரக்கேடுகளே காரணமென நம்புகிறோம். எனவே குறித்த கழிவு மீள் சுழற்சி மையத்தை உடனடியாக அகற்ற வேண்டும்' என போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் வலியுறுத்தியுள்ளனர். (அ-26-66)

## காணி...

காணி ஒன்றில் இந்தக் கும்பல் அத்துமீறி எல்லைத் தூண்களை நட முயன்றபோது, அங்கு வந்த காணி உரிமையாளர் அதனைத் தடுத்துக் கேள்வி எழுப்பியுள்ளார். அதற்கு அந்தக்கும்பல், காணி தமக்குரியது என்றும், முடிந்தால் ஆவணங்களைக் காட்டுமாறும் உரிமையாளரையே மிரட்டியுள்ளது. இது குறித்துப் பாதிக்கப்பட்டவர் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததை அடுத்து அந்தக்கும்பல் தப்பியோடியுள்ளது. இதேபோன்று மற்றொரு காணியிலும் இந்தக்கும்பல் இதேபாணியில் காணியை அபகரித்து, மிரட்டலில் ஈடுபட்டுள்ளது. அந்தக் காணியின் உரிமையாளரும் பொலிஸாருக்கு தொலைபேசி அழைப்பினை மேற்கொள்ள முயன்ற வேளை, காணியில் இருந்து அந்தக்கும்பல் நழுவிச் சென்றுள்ளது.
வெற்றுக்காணிகளை வைத்திருப்போர் இந்தக் காணிபிடிக்கும் கும்பல் குறித்து மிகுந்த விழிப்புடன் இருக்குமாறு பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளனர். (அ-26)

## காண்டீபனின்...

விதித்திருந்த இடைக்காலத் தடை உத்தரவு, எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 7ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.
இது தொடர்பான மனு நேற்று நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தபோது, பிரதிவாதிகளான ஆளுநர் மற்றும் உள்ளூராட்சி ஆணையாளர் சார்பில் முன்னிலையான அரச சட்டவாதி, ஆட்சேபனைகளைத் தாக்கல் செய்ய மேலதிக அவகாசம் கோரினார். மனுதாரர் தரப்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் ஆஜராகியிருந்தார். இருதரப்பு விவரங்களையும் பரிசீலித்த நீதிமன்றம், பிரதிவாதிகள் தமது பதில்களை இம்மாதம் 28ஆம் திகதிக்குள் சமர்ப்பிக்க வேண்டும் எனக் காலக்கெடு விதித்ததுடன், இடைக்காலத் தடையையும் நீடித்து உத்தரவிட்டது. (அ-110)

## சங்குப்பிட்டிப்...

தினூடாகப் பாரவூர்திகள் போக்குவரத்தினை மேற்கொள்ள வேண்டாமென வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை கேட்டுள்ளது.
எனவே, யாழ்ப்பாணம் - மன்னார் வீதியினூடாகப் பயணிக்கும் பாரவூர்திகளின் உரிமையாளர்கள் இதுதொடர்பில் கவனத்திலெடுத்துச் செயற்படுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (அ-66)

## வை-12...

இதனையடுத்து, பயணிகளின் உயிர்களுக்கும் விமானங்களுக்கும் அச்சுறுத்தல் ஏற்படும் என்பதால், கட்டுநாயக்க, இரத்மலான, ஹிங்குரகொட, சீனன்குடா, அநுராதபுரம், பலாலி, கட்டுக்குருந்த, கொக்கல, வவுனியா, வீரவில, மட்டக்களப்பு, மத்தள ஆகிய இடங்களில் உள்ள 12 விமான ஓடு பாதைகளைச் சுற்றியுள்ள பகுதிகளில் பொதுமக்கள் பட்டம் விடுவதை முற்றாகத் தவிர்க்க வேண்டும் என விமானப்படை எச்சரித்துள்ளது. (அ-இ)

## பொலிஸ்...

யுள்ளார். இந்தச் சம்பவம் கட்டுநாயக்க, தெவமொட்டாவ பகுதியில் நேற்றுமாலை 3. 50 மணியளவில் இடம்பெற்றுள்ளது.
போதைப்பொருள் வியாபாரி ஒருவரைக் கைது செய்ய இரு பொலிஸ் அதிகாரிகள் சென்றுள்ளர். அப்போது சந்தேகநபர் எவரும் எதிர்பாராத வகையில் பொலிஸ் அதிகாரி ஒருவரின் கைத்துப்பாக்கியைப் பறித்தெடுத்துள்ளார். பின்னர் அவர் அந்தப் பொலிஸ் அதிகாரியைச் சுட்டுவிட்டு அங்கிருந்து கைத்துப்பாக்கியுடன் தப்பியோடிவிட்டார். இந்தச்சம்பவத்தில் படுகாயமடைந்த பொலிஸ் அதிகாரி மீனுவாங்கொட ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். கைத்துப்பாகியுடன் தப்பியோடியபோதைப்பொருள் வியாபாரியைக் கைது செய்து அவரிடமிருக்கும் கைத்துப்பாக்கியை மீட்பதற்கு கட்டுநாயக்க பொலிஸார் விசேட தேடுதல் வேட்டையை முடுக்கிவிட்டுள்ளனர். (அ-இ)

## விண்ணப்பிக்கும்...

வரும் நிலையில், அடையாள அட்டை இல்லாத பாடசாலை விண்ணப்பதாரர்களுக்கான விசேட அறிவுறுத்தல்கள் அதிபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.
அதேநேரம், பாடசாலை மாணவரல்லாத தனிப்பட்ட விண்ணப்பதாரர்கள் தமது பாதுகாவலரின் அடையாள அட்டை எண்ணைப் பயன்படுத்தி விண்ணப்பிக்க முடியும். எதிர்வரும் ஜூலை 23ஆம் திகதியுடன் 'ஒன்லைன்' விண்ணப்பப் படிவங்களைச் சமர்ப்பிக்கும் காலம் முடிவடைவதுடன், எக்காரணம் கொண்டும் இறுதித் திகதி நீடிக்கப்பட மாட்டாது என்றும் பரீட்சைகள் திணைக்களம் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது. (அ-இ)

## பி.எச்.ஐ.யின்...

பெற்று வருகின்றது.
'நான் மாவட்டத்துக்கு வெளியே இருக்கிறேன்; எனது உறவினர் இறந்துவிட்டார், அவசரமாகப் பணம் தேவைப்படுகிறது" என்று குறித்த பொதுச்சுகாதாரப் பரிசோதகர் கேட்பதைப் போல தொலைபேசி மூலம் ஆறுக்கும் மேற்பட்ட வர்த்தகர்களிடம் இந்தக் கும்பல் பணம் கோரியுள்ளது. இதனை நம்பிச் சில வர்த்தகர்கள் பணத்தை வங்கிக் கணக்கொன்றுக்கு வைப்புச் செய்துள்ளனர். பணம் அனுப்பிய வர்த்தகர்கள், குறித்த பொதுச்சுகாதார பரிசோதகரைத் தொடர்பு கொண்டு, 'பணம் கிடைத்துவிட்டதா? மேலும் உதவி தேவையா?' எனக் கேட்ட போதே, இவ்வாறான ஒரு மோசடி நடக்கும் விடயம், அந்தப் பொதுச் சுகாதாரப் பரிசோதகருக்குத் தெரிய வந்துள்ளது. மோசடிக்காரர்கள் பயன்படுத்திய வங்கி கணக்கின் உரிமையாளர் அடையாளம் காணப்பட்டுள்ளார் என்றும், இதுகுறித்து தீவிர விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும், இவ்வாறான மோசடிகள் தொடர்பில் பொதுமக்கள் விழிப்பாக இருக்குமாறும் கிளிநொச்சிப் பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளனர். (அ)

## டெங்கு...

யில், கடந்த ஜனவரி மாதம் முதல் ஜூலை 14ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் 71,235 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 49 பேர் உயிரிழந்துள்ளனர் என்ற தகவல் வெளியாகியுள்ளது.
குறிப்பாக, ஜூலை மாதத்தின் கடந்த 14 நாட்களில் மட்டுமே 15,856 பேர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். மாகாண ரீதியான பாதிப்புகளில் மேல் மாகாணம் 37,490 நோயாளர்களுடன் முதலிடத்தில் உள்ளது. இதற்கு அடுத்தபடியாகச் சப்ரகமுவ மாகாணத்தில் 5,984 பேரும், மத்திய மாகாணத்தில் 5,924 பேரும், ஊவா மாகாணத்தில் 1,880 பேரும் பாதிக்கப்பட்டுள்ளதாகச் சுகாதாரப் பிரிவினர் எச்சரித்துள்ளனர். (அ-இ)

## 2 சிறார்களின்...

நீதிமன்ற அனுமதியுடன் நேற்றைய தினம் முன்னெடுக்கப்பட்ட அகழ்வின் போது, இந்த 2 சிறுவர்களின் என்புக் கூடுகளுடன் மேலும் இரண்டு மனித என்புக் கூட்டுக்குவியல்களும் அடையாளம் காணப்பட்டுள்ளன. செம்மணிப் புதைகுழியில் இதுவரை 87 நாட்கள் நடத்தப்பட்ட அகழ்வுப் பணிகளில் மொத்தம் 414 என்புக் கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், அவற்றில் 409 என்புக் கூடுகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-26)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# கதிர்காமம் ஆலயத்தை அடைந்தது பாதயாத்திரை

யாழ்ப்பாணம்,ஜூலை 16

வரலாற்றுப் புகழ்மிக்க கதிர்காமக்கந்தன் ஆலய வருடாந்த ஆடிவேல் விழாவை முன்னிட்டு தொண்டைமானாறு செல்வச்சந்நிதியிலிருந்து ஆரம்பமான மிக நீண்டதூரப் பாத யாத்திரையாகக் கருதப்படும் கதிர்காமக்கந்தன் ஆலயத்துக்கான பாதயாத்திரை கடந்த செவ்வாய்க்கிழமை கதிர்காமக் கந்தன் ஆலயத்தில் நிறைவடைந்துள்ளது.

ஜெயா வேல்சாமி தலைமையில் கடந்த மே மாதம்23 ஆம் திகதி காலை தொண்டைமானாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலய முன்றலில் இந்தப் பாதயாத்திரை ஆரம்பமானது. பாதயாத்திரைக் குழுவினர் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்கள், ஊவா மாகாணம் ஊடாக 58 ஆவது நாளான நேற்றுமுன்தினம் காலை கதிர்காமக் கந்தன் ஆலயத்தைச் சென்றடைந்தனர். (ச-66)

# தெய்வீக இசை அரங்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 16

சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் சந்நிதியான் ஆச்சிரம வாராந்த நிகழ்வாக தெய்வீக இசை அரங்கம் நாளை வெள்ளிக்கிழமை காலை 10.30 மணி இடம்பெறவுள்ளது.

ஆச்சிரம முதல்வர் செ. மோகனதாஸ் சுவாமிகள் அவர்கள் தலைமையில் நிகழ்வு நடைபெறும். இதில் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் முதுகலை வாய்ப்பாட்டுப் பட்டதாரியான திருமதி சுகிர்தினி பிரபுவின் தெய்வீகப் பக்திப் பாடல்கள் இடம்பெறவுள்ளன.

பிரபல இசைக்கலைமணி நடேசு செல்வச்சந்திரனின் பின்னணி இசையமைப்புடன் ஏனைய அணிசெய் கலைஞர்களின் பக்கவாத்திய இணைப்புகளும் நிகழ்வை அலங்கரிக்கவுள்ளன. (ச-80-66)

# வண்ணை காமாட்சி அம்பாளுக்குத் தேர்

யாழ்ப்பாணம்,ஜூலை 16

வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் (நாச்சிமார் கோயில்) ஆலயத் தேர்த்திருவிழா ஆடிப்பிறப்பு நன்னாளான நாளை வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளது.

அழகிய தங்கரதத்தில் அம்பிகை திருவீதி வலம் வந்து அடியார்களுக்கு காட்சியளிப்பார். (ச)

# ஆடிப்பிறப்பு வழிபாடுகள்

யாழ்ப்பாணம்,ஜூலை 16

வரலாற்றுச் சிறப்புமிக்க தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்கா தேவி ஆலயத்தில் நாளை வெள்ளிக்கிழமை அம்மனுக்குரிய மாதமான ஆடிமாதப் பிறப்பை முன்னிட்டுச் சிறப்பு வழிபாடுகள் நடைபெறவுள்ளன.

நாளை அதிகாலை 5.30 மணியளவில் பூஜை வழிபாடுகள் ஆரம்பமாகி காலை 6 மணியளவில் ஆடி மாதப் பிறப்புச் சங்கிராந்தி தீர்த்த உற்சவம் இடம்பெறும். (ச-66)

# ஆடிப்பிறப்பு விழா

யாழ்ப்பாணம்,ஜூலை 16

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தின் ஆடிப்பிறப்பு விழா நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு இத்தாவில் முருகமூர்த்தி கோவிலில் இடம்பெறவுள்ளது.

இந்து சமய கலாசார அலுவல்கள் விவகாரத் திணைக்களம், வடமாகாண பண்பாட்டலுவல்கள் அலகு ஆகியவற்றின் அனுசரணையுடன் பிரதேச செயலர் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதிபர் செஞ்சொற் சொல்லருவி சந்திரமௌலீசன் லலீசன் பங்கேற்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி மாவட்டச் செயலக சிரேஷ்ட கலாசார அலுவலர் திருமதி கி மாலினி, மாவட்டச் செயலக இந்து கலாசார அபிவிருத்தி அலுவலர் திருமதி பா நிலோஜா ஆகியோர் கலந்து கொள்வர். (ச-9)

## 'வாரி மஹிம' திட்டத்தின்கீழ்

# கிளிநொச்சியில் குளங்கள் புனரமைப்பு!

கிளிநொச்சி,ஜூலை 16

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில், சிறிய நீர்ப்பாசனக் குளங்களைப் புனரமைப்புச் செய்யும் 'வாரி மஹிம - கிராமப்புற நீர்ப்பாசன மேம்பாட்டுத் திட்டம்' தொடர்பான கலந்துரையாடல் அண்மையில் கிளிநொச்சியில் நடைபெற்றது.

இந்தத் திட்டத்தின் முதற்கட்டமாக, கிளிநொச்சி மாவட்டத்தில் கடுமையான வறட்சி அல்லது பராமரிப்பின்றிப் பாதிக்கப்பட்டுள்ள 10 சிறிய நீர்ப்பாசனக் குளங்களை அடையாளம் கண்டு, அவற்றை முழுமையாகப் புனரமைத்து அபிவிருத்தி செய்வது குறித்து இதன்போது விரிவாக ஆராயப்பட்டது.

கலந்துரையாடலில் கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் சு. முரளிதரன், நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கிளிநொச்சி மாவட்டப் பணிப்பாளர் மற்றும் தொழில்நுட்பப் பொறியியலாளர்கள் எனப் பலர் பங்கேற்றனர். பருவமழைக் காலங்களில் வீணாகும் நீரைச் சேமித்து வறட்சிக்கு முகங்கொடுப்பதற்கும் அரசாங்கத்தால் இந்த 'வாரி மஹிம' திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக் கது. (ச-55)

# சொற்பொழிவு

சரவணை தேவபுரம் ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி திருக்கோவில் வருடாந்த மஹோற்சவத்தைமுன்னிட்டுசிறப்புச்சொற்பொழிவு எதிர்வரும் 20ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் 29ஆம் திகதி புதன்கிழமை வரை தினமும் மாலை 6மணிக்கு இடம்பெறவுள்ளது.

சிவநெறிப்பிரகாசர், சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ள நிகழ்வில் கந்த. சத்தியதாசன், சி. கா. கமலநாதன், செ. த. குமரன், பொன். சந்திரவேல், க.கைலநாதன், ச. நவநீதன், க. கயிலைவாசன், நித்தியபாபுதரன், த. மனோஜ்குமார் ஆகியோரின் சொற்பொழிவு இடம்பெறும்.

சொற்பொழிவிலிருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-41)

**விற்பனைக்கு**
யாழ் மாநகரசபை எல்லைக்குள் இராசாவின் தோட்டத்தில் 1 1/2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 072 151 5090
(cs61880) N

**வீடு வாடகைக்கு உண்டு**
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்கு அருகாமையில் மூன்று அறைகளைக் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:- 074 291 9908

**காணி விற்பனைக்கு**
சிவப்பிரகாசம் வீதியில் 1 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:- 075 262 0586
(CS61719) J-1

**வீடு வாடகைக்கு தேவை**
பல்கலைக்கழக விரிவுரையாளர் குடும்பமாக வசிப்பதற்கு வீடு வாடகைக்கு தேவை, நல்லூர், திருநெல்வேலி அண்டிய பகுதிகள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு:- 072 304 9494
(CS/61885) J-1

**A/L - வரலாறு 2K26**
மாபெரும் கருத்தரங்கு
M.பத்மன் B.A (Hons) History M.A (History), M.E.D (O.U.S.L)
- இடம் :- D.M.I ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
- நேரம் :- காலை 10.30 முதல் மாலை 5.30 வரை
- காலம் :- 18.07.2026 (சனி) மற்றும் 19.07.2026 (ஞாயிறு)
M.C.Q, கட்டுரை வினாக்கள், படம் குறித்தல் அனைத்தும் இலகுவான விளக்கத்துடன் கற்பிக்கப்படும். வெளி மாணவர்களும் பங்குபற்றலாம்.
T.P : 077 482 5587

# தென்மராட்சியில் டெங்கு ஒழிப்பு

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியக எல்லைக்குட்பட்ட பகுதிகளில், பருவமழைக் காலத்தை முன்னிட்டு டெங்கு பரவும் அபாயத்தைத் தடுப்பதற்கான விசேட டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் தற்போது முழுவீச்சில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

உள்ளூர் வழிபாட்டுத்தலங்களில் வருடாந்த உற்சவங்கள் இடம்பெற்றுவருவதைக் கருத்திற் கொண்டு, இந்த விசேட தூய்மையாக்கல் செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

டெங்கு நுளம்புகள் பெருகுவதைத் தடுக்கும் நோக்கில், சாவகச்சேரிப்பகுதியில் உள்ள அனைத்து அரச மற்றும் தனியார் நிறுவனங்கள், பாடசாலை வளாகங்கள் என்பன சுகாதார அதிகாரிகளால் அக்குவேறுஆணிவேறாகப் பரிசோதிக்கப்பட்டுவருகின்றன.

இதன்போது, தேவையற்ற கழிவுப்பொருள்கள் அகற்றப்படுவதுடன், டெங்குக் குடம்பிகள் உருவாகக்கூடிய இடங்கள் கண்டறியப்பட்டு அவற்றுக்கு மருந்து விசிறும் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படுகின்றன. (ச-9)

**வேலை ஆட்கள் தேவை**
யாழ் மாநகர சபைக்குட்பட்ட எல்லைக்குள் உள்ள உணவகம் ஒன்றிற்கு வேலை ஆட்கள் தேவை.
- கொத்து / றைஸ் போடுபவர்கள்
- சமையல் செய்பவர்கள்
- சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்
- ஆண் / பெண் இருபாலாரும் தொடர்புகொள்ளலாம்.
தொடர்புகளுக்கு : 077 314 7580
(cs61882) (N.1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 16.07.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.